**இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சிவில் விமான பொக்குவரத்து அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1978 இன் 38 ஆம் இலன்ன நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

என்னுடைய அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், பொருத்தமானவாறு அதனை வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையின் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுமத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள

வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடசச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5. நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,193,585 பெறுமதியான முற்கொண்டு வரப்படுகின்ற மூன்று கட்டிடங்களின் தேறிய பெறுமதி மற்றும் பயன்பாட்டுக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆகஸ்ட் மாதத்திலிருந்து PPE இல் காணி மற்றும் கட்டிடங்களை மீள் பெறுமதியிடுவதற்கு மதிப்பீட்டு திணைக்களத்திற்கு CAA வேண்டியிருந்ததுடன் எல்லை மற்றும் உரிமையாண்மை பிரச்சகைள் காரணமாக அறிக்கைகள் இன்னமும் நிலுவையில் உள்ளது. | LKAS 16 இன் வேண்டுகையுடன் இணங்கியொழுக வேண்டும். |

### 1.5.2. கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| பயணிகள் வரி மீதான சேவை கட்டணங்களிற்காக அதிகாரசபிய்ன வருமான அங்கீகார கொள்கை அட்டுறு அடிப்படையில் உள்ள பொதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆறு (06) விமானங்களிலிருந்து பெற வேண்டிய ரூபா 11,070,728,696 தொகையான பயணிகள் வரி கணக்கீடு செய்யப் பட்டிருக்கவில்லை. ஆகவே, பொது திறைசேரி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வரையறுத்த விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (தனியார்) கம்பனி என்பவற்றிற்கு செலுத்த வேண்டியவை முறையே ரூபா 8,303,046,522, ரூபா 899,496,707 மற்றும் ரூபா. 1,798,993,414 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், அதிகாரசபையின் பயணிகள் வரி மீதான சேவை கட்டணங்கள் ரூபா 69,192,054 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | CAA ஆனது திறைசேரி சார்பில் பயணிகள் வரியை சேகரித்து கைதவிர்க்கின்ற விமானங்களிற்கும் திறைசேரிக்கும் இடையில் இடைக்கால பணிகளை செயற்படுத்தகின்றது. ஆகவே, திறைசேரி நடைமுறைக் கணக்கின் கீழ் செலுத்த வேண்டிய தொகை காட்டப்பட்டுள்ளது. | கணக்கீட்டு கொள்கை வேண்டுகையுடன் இணங்கியொழுக வேண்டும். |

### 1.5.3. கணக்கீட்டுக குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) திசெம்பர் 31 வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத் திடமிருந்து பெறவேண்டிய ரூபா 136,799,321 தொகையான பெறுமதி சேர் வரியில் (VAT) ரூபா 127,895,303 ஆன தொகை VAT மீளளிக்காமையால் ஆண்டின் போது சீராக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மிகுதி பெற வேண்டிய VAT தொகை ஐயத்திற்கிடமாக உள்ள போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றில் தள்ளுபடி அல்லது வெளிப்டுத்தலிற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை | பெறவேண்டிய VAT மீதியின் 50% உள்நாட்டு இறைவரித் தணைக்களத்தால் தெளிவாக்கப் பட்டிருந்ததுடன் தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கைகள் இருக்கின்ற தொகையை தெளிவாக்குவதற்கு செயற்பாட்டில் உள்ளன. 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றில் ஏற்பாடுகள் செய்யப்படும். | VAT மீளளிப்பு உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் கடன் தள்ளுபடி அல்லது வெளிப்படுத்தலிற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்காதுவிடின் நிதிக்கூற்றில் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் 2022 இன் 25 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு பங்களிப்பு அதிகாரச்சட்டத்தின் 2(இ) பிரிவின் பிரகாரம், 2022 ஒக்தோபர் 01 இலிருந்து வருமான வரி மதிப்பீடாக அனுமதிக்கப்பட்டிருந்த ரூபா 10,679,705 தொகையான சமூக பாதுகாப்பு பங்களிப்பு (SSCL) வரிக்கு எதிராக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 2023.03.20 இல் கடிதமொன்றை வழங்கியிருந்ததுடன் பயணிகள் சேவைக் கட்டணவரி SSCL இற்காக பொறுப்பாக உள்ளது. அந்த கடிதத்தின் அடிப்படையில் IRD 2022 ஒக்தோபர் 01 இல் மதிப்பீடுகளை வழங்கியிருந்தது. CAASL ஆனது வரிமதிப்பீட்டிற்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டிருந்ததுடன் IRD இறுதி தீர்மானத்தை அறிவித்திருக்கவில்லை. மேலும், பிஸ்கால் கொள்கை திணைக்களத்தால் VAT மற்றும் SSCL இற்காக பொறுப்பேற்ற முடியாதிருந்த பயணிகள் வரியான அரச வரி உள்ளது என உள்நாட்டு இறைவரி திணைக்களம் உறுதிப்படுத்தியிருந்தது. . | இறுதி தீர்மானம் தொடர்பில் எழுத்து மூலம் வேண்டுகை செய்யப்பட வேண்டியதுடன் இதன்படி நிதிக்கூற்றில் சீராக்கல் செய்யப்பட வேண்டும். |
| (இ) 2022 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் அதிகாரச் சட்டத்தின் முதலாவது பட்டியயின் (j) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையானது 2016 இன் இரண்டாவது காலாண்டிலிருந்து 2022 திசெம்பர் 3 வரை பயணிகள் சேவை கட்டண வரி வருமானம் ரூபா 112,885,849 ஆன பெறுமதி சேர் வரி மற்றும் மீளாய்வாண்டிற்காக ரூபா 364,495,666 ஆன சேவைக் கட்டண வருமானத்தில் ரூபா 54,674,342 ஆன தொகை செலுத்தவதற்கு பொறுப்பாக உள்ளது. எவ்வாறாயினும், ரூபா 167,560,191 தொகையான செலுத்த வேண்டிய மொத்த VAT ஐ கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் பாரியளவு வரிசெலுத்துவோர் பிரிவு VAT இற்காக கடிதம் அனுப்பி மதிப்பீடுகளை வழங்கியிருந்தது. பயணிகள் சேவைக்கட்டண வரியில் VAT காட்டுதல் செய்கின்றது. CAASL அனது வரிமதிப்பீட்டிற்கு எதிராக மேன் முறையீடு செய்திருந்ததுடன் அரசாங்கத்தின் சார்பில் CAASL சேவைகள் வழங்குகின்றது என சகல அடிப்படைகளும் வழங்குகின்றது. எதிர்பார்க்கப்பட்டவாறு பயணிகள் சேவைக் கட்டண வரி வெளிப்படுத்தல் மற்றும் வருமானம் மற்றும் உள்ளீட்டு வரி என்பன VAT அறிக்கைகளில் விகிதாசாரத்தில் அனுமதிக்க மறுத்தது. | மேன்முறையீடு தொடர்பில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து தகவல்கள் கோர வேண்டியதுடன் இதன்படி நிதிக்கூற்றுக்களில் அவர்களுடைய தீர்மானம் சீராக்கல்கள் செய்யப்பட வேண்டும். |

(ஈ) ரூபா 1,772,902 பெறுமதியான உபகரணங்கள் சொத்துக்கள் கொள்வனவு செய்யப் பட்டதிலிருந்த அதிகாரசபை செயற்பாடுகளிற்கு பயன் படுத்தப்பட்டிருக்காததுடன் அதிகாரசபை களஞ்சியம் மற்றும் சுகாதார பிரிவில் இருந்தது. எவ்வாறாயினும், அதிகாரசபையானது அந்த சொத்தக்களிற்கு முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் இதன்படி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. ரூபா 8,582,775 பெறுமதியான இரண்டு வாகனங்களும் அதிகாரசபை வளவில் பயன்படுத்தப்படாது விடப்பட்டிருந்தது.

எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கீழே உள்ளன.

| *விடயம்* | *பெறுமதி (ரூபா)* | *எடுக்ப்பட்ட நடவடிக்கை* |
|---|---|---|
| 9 DVD பிளெயர் | 28,089 | பொது மக்கள் கண்காட்சிகளில் பய்னபடுத்தவதற்கு வைத்திருத்தல் |
| 15 LCD மொனிற்றர் | 39,136 | பொது மக்கள் கண்காட்சிகளில் பய்னபடுத்தவதற்கு வைத்திருத்தல் |
| அல்கலொலிற்கான சுவாச பரீட்சிப்பு இயந்திரம் | 1,705,677 | இது ஜப்பான் நன்கொடையாக உளளது. இந்த விடயம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| KI-8168 றெச்ரொன் ஜீப் | 7,650,000 | இந்த விடயம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| YM - 4182 முச்சக்கர வண்டி | 1,000,000 | இந்த விடயம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| **Total** | **10,422,902** | |

அதிகாரசபையானது சகல சொத்துக்களினதும் இடம், நிலை மற்றும் பய்பாட்டு வரலாறு உள்ளடங்கலாக விரிவான தரவுகளை பேணப்பட வேண்டும்.

(உ) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 178,943,596 கூட்டுத் தொகையான ஆறு (6) கடன்பட்டோருக்கு மீதி உறுதிப்படுத்தல் கடிங்கள் அனுப்பப்ட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 173,193,596 கூட்டுத் தொகையான மூன்று (03) கடன்பட்டோர் உறுதிப்படுத்தி இருக்காததுடன் உறுதிப்படுத்தப்பட்ட மீதிக்கும் பேரேட்டிலுள்ள மீதிக்கும் இடையில் ரூபா 473,184 ஆன வித்தியாசங்கள் இருந்தது.

இது அதிகாரசபை கணக்காய்வு அத்தியட்சகருக்கான பிரதியுடன் மீதி உறுதிப்படுத்தல்களை கோரி சகல கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோருக்கும் கடிதங்களை அனுப்பியிருந்தது.

அதிகாரசபையானது உரிய காலத்தில் சகல கடன்பட்டோருக்கும் கடிதங்களை அனுப்பியிருந்ததை உறுதிப்படுத்துவதற்கு மீளாய்வு செய்து உறுதிப்படுத்தல் நடைமுறையை முன்னெற்ற வேண்டியதுடன் அவர்களுடைய பதிவேடுகளிற்கும் உறுதிப்படுத்தல் கடிதங்களில் குறிப்பிடப்பட்ட தொகைகளிற்கும் இடையிலான முரண்பாடுகள் பற்றி விசாரணை செய்ய வேண்டும்.

(க) ரூபா 232,644,548 கூட்டுத்தொகை கடன்கொடுத்தோரில் ரூபா 124,902,383 கூட்டுத் தொகையான பன்னிரண்டு கடன்கொடுத்தோர் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் பெறப்படாமையால் மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

இது அதிகாரசபை கணக்காய்வு அத்தியட்சகருக்கான பிரதியுடன் மீதி உறுதிப்படுத்தல்களை கோரி சகல கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோருக்கும் கடிதங்களை அனுப்பியிருந்தது.

அதிகாரசபையானது உரிய காலத்தில் சகல கடன்கொடுத்தோருக்கு கடிதங்களை அனுப்பியிருந்ததை உறுதிப்படுத்துவதற்கு மீளாய்வு செய்து உறுதிப்படுத்தல் நடைமுறையை முன்னேற்ற வேண்டும்.

1.6. பெறவெண்டிய மற்றும் செலுத்த வேண்டியவைகள்

1.6.1. பெறவெண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2023 சனவரி 12 இல் சிவில் விமான சேவைகளின் பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட EL/01/2023 ஆம் இலக்க நெறிப்படுத்தலின் 09 ஆம் பந்தியிற்கமைய விமானங்கள் பயணிகள் வரி கேசரிக்கப்பட வேண்டும். மேற்குறித் நெறிப்படுத்தலின் 6 ஆம் பந்திக்கமைய சேகரித்தலைப் பற்றி குறித்த கால எல்லைக்குள் கொடுப்பனவை அனுப்புவதற்கு தவறிய விமானங்கள் செலுத்த வேண்டிய மொத்த தொகைக்கு மேலதிகமாக ஒவ்வொரு நாளிற்கும் வட்டி செலுத்துவதற்கு வேண்டப்பட்டது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையானது ஆறு விமானங்களிலிருந்து நிலுவையாக இருக்கின்ற பயணிகள் வரிக்காக ரூா 1,408,373,439 தொகையான தாமத வட்டியை கணிப்பீடு செய்திருந்தது. எவ்வாறாயினும், அதிகாரசபையானது இந்த அறிக்கை திகிவரை அந்த வட்டி கட்டணங்களை இன்னமும் அறவிட்டிருக்கவில்லை. | விமானங்கள் அவர்களின் கவனயீனம் காரணமாக நிகழ்ந்த சிவ விபத்துக்களை தவிர பயணிகள் வரி கணிப்பிடுவதற்காக விமானம் புறப்பட்ட திகதி தொடர்பில் நிலவிய நாணயமாற்று வீதத்தை பிரயோகித்திருக்கவில்லை, ஆனால் அந்த சகலதும் பின்னர் திருத்தப்பட்டிருந்தது. விமானங்கள் ரிக்கெற் வழங்கிய திகதியில் திருப்பியதன் அடிப்படையில் வழங்கப்பட்ட மாற்ற விபரங்கள் CAASL 015 – (23-1) சமர்ப்பிக்க முடியவில்லை.<br>விமானங்கள் ரிக்கெற் வழங்கிய திகதியில் திருப்பியதன் அடிப்படையில் வழங்கப்பட்ட மாற்ற விபரங்களை வழங்கியிருந்தது. | பயணிகள் வரியை அறவிடுவதற்கு முறையான பொறிமுறையை அறிமுகப்படுத்த வேண்டும். |

1.7. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமான போக்கவரத்து அதிகாரசபை அதிகாரச்சட்டம் | | | |
| (i) பிரிவு 7(இ) | இலங்கையின் விமாண சேவை அபிவிருத்தி திட்டம் அதிகாரசபையால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் இந்த அறிக்கை திகதிவரையும் தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை | இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் சபை 2024 பெப்ரவரி 26 இல் அதன் 197 ஆவது சபை கூட்டத்தில் இலங்கையிக விரிவான 10 ஆண்டு திட்ட வேலையை தாபித்து அமுலாக்குவதற்கு அமைச்சரவை அனுமதிக்காக தேசிய சிவில் | அதிகாரசபையானது 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை அதிகாரச்சட்டத்தை பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விமான பிரதான திட்டத்தை (NCAMP) சமர்ப்பித்து அனுமதி பெற்றிருந்தது. அதேநேரம், வரையறுத்த விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (SL)) ஆனது CAMP இற்கு பரிந்துரைத்த திருத்தத்தை சமர்ப்பிக்கப்பட்டது. தற்போது CAASL இன் திருத்தம் மற்றும் பரிந்து ரைக்கப்பட்ட மாற்றங்களின் பின்னர் மீளாய்வு செய்வதை கருத்தில் கொள்கின்றது. CAMP ஆனது தேசிய திட்டமிடல் குழு மற்றும் அமைச்சரவை அனுமதிக்கான சமர்ப்பிக்கப்படும். | |
| (ii) பிரிவு 7(ஏ) | அதிகாரசபையினுடைய உத்தியோகத்தர்களை கருத்திற்கொண்டு விமான விபத்து புலனாய்வு சபை (சபை) நியமிக்கப்பட்டு 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமான அதிகாரச் சட்டத்தின் 51 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையானது இலங்கையின் பயங்கரவாததால் ஏற்பட்ட விமான விபத்துக்கள் மீது புலனாய்வு தொடங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய சபையை நியமிக்காமல் அதிகார சபையானது 2006, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் விபத்து நிதிகளிற்கு முறையே ரூபா 20 மில்லியன், ரூபா 10 மில்லியன் மற்றும் ரூபா 20 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இது தொடர்பில், இலங்கை விமான விபத்து புலனாய்வு பணியகமொன்றை தாபிப்பதற்கு 2016 யூலை 26 ஆந் திகதிய CP/16/375/709/063 ஆம் இலக்க தீர்மானத்தை அமைசச்சரவை எடுத்திருந்ததுடன் பணியக | விமான விபத்து புலனாய்வு பணியகம் (AAIB) தாபிப்பதற்கான அமைச்சரவை தீர்மானம் இலங்கையில் நடைபெற்ற ICAO யூனிவேர்சல் பாதுகாப்பு கவனயீன காணக்காய்வால் எழுந்த கண்டுபிடித்தல் பொறுப்பில் அரசால் பிரேரிக்கப்பட்ட சரியான நடவடிக்கை யொன்றாக இருந்தது. அதிகாரசபையானது சட்ட வரைஞர் ஆலோசனையுடன் சொல்லப்பட்ட நடவடிக்கை எடுப்பதற்கு 2016 இலிருந்து அவசியமான படிமுறைகளை எடுத்திருந்தது. இது இறுதிக் கட்டத்தில் உள்ளது. வரைவு AAIB சட்டத்தின் பிரகாரம், அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட தாபனக் கட்டமைப்பு கைவிடுவதற்கு ஏற்பாடுகள் இருந்தன. மேலும், சிவில் விமான சேவைக்கு உட்படுத்த ஒதுக்கப்பட்ட அமைச்சின் வாக்குப்பண பேரேட்டிலிருந்து வருடாந்தம் ஐம்பது மில்லியன் நிதியை வைத்திருப்பதற்கு ஏற்பாடு உள்ளது. 2010 இன் 14 | அதிகாரசபையானது 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை அதிகாரச்சட்டத்தை பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களுடன் தலைவரை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதித்திருந்ததுடன் அதேநேரம் அமைச்சு அல்லது அதிகாரசபை பாதீட்டிலிருந்து ரூபா 50 மில்லியன் ஏற்பாடு ஒதுக்குவதற்கும் 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமான அதிகாரச்சட்டம் திருத்துவதற்கும் அமைச்சரவை அனுமதித்திருந்தது. எவ்வாறாயினும் அதிகார சபையாது அமைச்சரவை தீர்மான நெறிப்படுத்தலை பின்பற்றுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | ஆம் இலக்க ஊயு அதிகாரச் சட்டத்தின் உரிய பிரிவுகளை இரத்து செய்வதற்கு வரைவு AAIB சட்டத்தில் ஏற்பாடு உள்ளது. | |
| (iii) பிரிவு 9 | இரண்டாவது பட்டியலில் குறிப்பிடப்பட்ட 14 ஆகாய விமான நிலையங்களை உடமையாக்கல் கட்டளையை மற்றும் 08 ஆகாய விமான நிலைய வசதிகள் மற்றும் 2016 ஆண்டளவில் வர்த்தமாணியில் அதிகாரச் சட்டத்தின் மூன்றாவது பட்டியலில் குறிப்பிடப்பட்ட அவற்றறிகு சொந்தமான காணிகள் வெளியிடுவதற்கு அதிகார சபையால் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. அதிகாரச்சட்ட திகதியில் இருந்து 21 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட 10 விமான நிலையங்களை வர்த்தமாணியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 இல் வெளியிடப்பட்ட வர்த்தமாண அறிவித்தலை தொடர்ந்து CAASL நிர்வாக நடைமுறை மற்றும் போக்குவரத்து நடைமுறை பூர்த்தியாக்கவதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அந்த ஐந்து ஆண்டுகளின் போது மட்டக்களப்பு விமான நிலையம் மற்றும் மாதம்பெல்லாவில் வானொலி ஒலிபரப்பு உதவி, அத்தியாவில் ஆகாய விமான தகவல் பரிமாற்ற நிலையம் மற்றும் கந்தவெலாவில் சிவில் விமான போக்குவரத்து பயிற்சி நிலையம் என்பன உள்ளடங்கலாக மூன்று ஆகாய விமான நிலைய வசதிகள் 2022 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய 2293/33 ஆம் இலக்க மற்றும் 2023 பெப்ரவரி 13 அந் திகதிய 2320/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமாணியில் ஆதனங்களின் எல்லையை தெளிவாக்குவரத்து மீள வர்த்தமாணி அறிவித்தல் வெளியிடப்பட்டது. மேலும், 2017/12/21 ஆந் திகதிய | அதிகாரசபையானது 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை அதிகாரச்சட்டத்தை பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 2050/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமாணியில் வெளியிடப்பட்ட இருக்கின்ற ஆதனங்களின் பட்டியல் மீள வர்த்தமாணியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தது. அதிகார சயைால் செய்யப் பட்ட வேண்டுகையின் பின்னர், இரத்மலானை, நீர்கொழும்பு, நுவரெலியா மற்றும் கந்தானவின் பிரதேச செயலகங்கள் திருத்திய வர்த்மாணி அறிவித்தலுடன் செயற்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எல்லைகள் மற்றும் அரசாங்க மானியமாக பெறுகின்ற ஆதனங்கள் என்பவற்றினை மீள வர்த்தமாணியில் வெளியிடுவதற்கு வேண்டப்பட்ட நிர்வாகச் செயற்பாடுகள் பல்வெறு அரசாங்க அமைப்புகளுடன் தொடர்புடன் அதிக காலம் எடுக்கப்பட்டு செயற்பாட்டில் இருந்ததுடன் பாரதூரமான நடவடிக்கைகள் தேவைப்பட்டது. | |
| (iv) 9 ஆம் பிரிவு மற்றும் 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 2050/38 ஆம் இலக்க இலங்கை சனநாய சோசலிச் குடியரசின் (அதிவிசேட) வரத்தமாணி | யாழ்ப்பாண விமான நிலையம் வர்த்தமாணி மூலம் சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை மாற்றப்பட்டு உடமையாக்கப் பட்டிருந்த போதிலும் 2019 ஏப்ரல் 02 ஆந் திகதிய CP/19/2008/105/009-1 ஆம் இலக்க அமைச்சரவை கூட்டத்தில் வழங்கப்பட்ட அனுமதிப் பிரகாரம் மற்றும் 2019 ஒக்தோபர் 17 இல் சர்வதேச விமான நிலையமாக யாழ்ப்பாண விமான நிலையம் தொடங்கப்பட்டது. அதிகார சபையானது யாழ்ப்பாண விமான நிலையத்தில் 2962.18 ஏக்கர் காணி எல்லையை இனங்கண்டு நடைமுறையை செயற் படுத்தியிருக்காததுடன் இந்த | பதில் பெறப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையானது 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை அதிகாரச்சட்டத்தை பின்பற்ற வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறிக்கை திகதிவரை வர்த்தமாணி ஊடாக அவற்றினை வெளியிட்டிருக்கவிலை. | | |
| (ஆ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழயர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 47 ஆம் பிரிவு (EPF) 1980 இன் 16 அம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் (ETF) 44 ஆம் பிரிவு மற்றும் 2013 செப்தெம்பர் 13 ஆந் திகதிய 02/2013 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | EPF மற்றும் ETF அதிகாரச் சட்டங்களில் நிர்ணயித்த உழைப்புகளிற்கு முரணாக அதிகாரசபையானது EPF மற்றும் ETF பங்களிப்பை கணிப்பீடு செய்யும் போது 7 விதிதியாசமான படிகளை உள்ளடக்கியிருந்தது. இந்த தவறான கணப்பீட்டினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 125,143,338 ஆன தொகை மேலதிகமாக செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் ஊமியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 15,017,440 ஆன தொகை மேலதிகமாக செலவு கைக்கப்பட்டிருந்தது என 2020- 2023 காலப்பகுதியின் மாதிரி கணக்காய்வு செவ்வையில் வெளிப்பட்டது. | சபையானது 1958 இன் 15 ஆம் இலக்க EPF அதிகாரச் சட்டம் மற்றும் 1980 இன் 16 ஆம் இலக்க ETF அதிகாரச் சட்டத்தின் கீழ் “உழைப்புகளின்” கீழ் படிகள் உள்ளடக்கப்பட்டதா என்படு தொடர்பில் அபிப்ராம்/ நெறிப்படுத்தலை பெறுவதற்கு தொழில் ஆணையாளருக்கு கடிதம் எழுதுவதற்கு CAA ஐ அறிவுறுத்தியிருந்தது. CAA ஆனது 2024.05.14 இல் தொழில் திணைக்களத்திற்கு வேண்டுகை கடிதத்தை கையளித்திருந்தது. தொழில் திணைக்களம் உள்ளக ரீதியான ஆலோசனை வழங்கியிருந்தமையால் தெளிவுபடுத்தல்களை நிரூபிப்பதற்காக அவர்களிற்கு குறிப்பிடத் தக்களவு காலம் எடுக்குமென அவர்களிற்கு தொழில் திணைக்களம் அறிவித்திருந்தது. நான் உங்களிற்கு மேற் குறிப்பிட்டவற்றை அறிவித்திருந்தேன். இந்த அதிகாரசபை அது தொடங்கியதிலிருந்து EPF மற்றும் ETF நோக்கங்களிற்காக அந்த படிகளை கருத்திற் கொண்டிருந்ததுடன் திடீர் மாற்றத்தை கொண்டு வருவதின் விளைவால் CAA ஊழியர்களிற்கு இடையில் அமையின்மை மறறும் CAA இன் செயற்பாடுகள் இடையூறு எழக்கூடும். CAASL ஆனது EPF மற்றும் ETF அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீடுகளை செய்வதற்கு படிமுறைகளை | EPF மற்றும் ETF கணிப்பீடு அதிகாரச் சட்டதில் உள்ளடக் கப்பட்ட அறிவுறுத்தல் பிரகாரம் செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எடுத்திருந்த அதேநேரத்தில் தொழில் திணைக்களத் திடமிருந்து தெளிவு படுத்தல்களிற்காக CAASL காத்திருக்கின்றது. | |
| (இ) | 2023 சனவரி 11 ஆந் திகதிய 2314/16 ஆம் இலக்க (அதிவிசேட) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமாணி அறிவித்தல் | ஏழு (7) விமானங்கள் பயணிகள் வரியாக சேகரிக்கப்பட வேண்டிய பணத்திற்காக பிணை வைப்பாக பணிப்பாளர் நாயகத்தால் நிர்ணயிக்கப் பட்டவாறு ரூபா 3,776,266,598 தொகையான வங்கி உத்தரவாதங்கள் அல்லது பணத்தொகை சமர்ப்பித்திருக்கவில்லை | விமனங்கள் பயணிகள் வரிக்காக பிணை வைப்பாக வங்கி உத்தரவாதங்களை வழங்கியிருந்தது. குறிப்பிடப்பட்ட விமான பின்வருவனவற்றினை கொண்டுள்ளது.<br>• அவை பட்டியல் அனுமதியை பெற்ற பின்னர் செயற்பா:டு நடைமுறையில் இருக்கவில்லை.<br>• உத்தரவாதத்திற்காக காசு வைப்பு செய்யப்பட்டது மற்றும்,<br>• வழங்கிய வங்கி உத்தரவாதம் காலாவதியாவதற்கு ஒரு மாதத்திற்கு மேல் இருந்தது. | அதிகாரசபையானது பயணிகள் வரியை சேகரிப்பதற்கான பணத்திற்காக பிணை வைப்பாக வங்கி உத்தரவாதம் அல்லது பணத் தொகை பெறப்பட வேண்டும். |
| (ஈ) | நிதிப்பிரமாண இல. 7 மற்றும் 2008 மே 22 ஆந் திகதிய 1550/7 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமாணி அதிவிசேட அறிவித்தல் மற்றும் 2023 நவம்பர் 28 ஆந் திகதிய 23/1937/628/094 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் | வர்த்தமாணியால் நெறிப்படுத்தப்பட்டவாறு சேகரிக்கப்பட்ட வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டணம் (OSS) திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வெண்டும். எவ்வாறாயினும், அதிகாரசபையானது திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்காமல் வர்த்தமாணி அறிவித்தல் ஆய்விலிருந்து அதிகாரசபை வருமானமாக OSS அங்கீகரித்திருந்தது.<br><br>மேலும், 2023 நவம்பர் 28 ஆந் திகதிய 23/1937628/094 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தால் திரண்ட நிதியத்திற்கு உரிய மிகையறவீடடை செலவு வைப்பதற்கு அதிகாரசபையை நெறிப்படுத்தியது. இதன்படி, திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் திரண்ட நிதியத்திற்கு நிறுத்தி வைத்த உழைப்புக்களை | முதலாவது அமைச்சரவை தீர்மானம் 2023/1/23 ஆக இருந்ததுடன் சகல OSS வருமானங்களும் மாற்றுவதற்கு CAASL வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், கௌரவ சிவில் விமான போக்குவரத்து அமைச்சு திருத்தப்பட்ட அமைச்சரவை தீர்மானம் மற்றும் முறையான தீர்ப்புகளுடன் இத் தீர்மானம் மேன் முறையீடு செய்திருந்ததுடன் 2024/02/19 இன் 2 ஆவது அமைச்சரவை தீர்மானம் உள்ளடக்கங்களை கருத்திற்கொண்டு எடுத்த சட்ட செயற்பாட்டில் இருந்ததுடன் கௌரவ அமைச்சினுடைய குறிப்பு/197/பெப்ரவரி/2024/04 இன் 2023 நவம்பர் 20 இல் 23/1937/628/094 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தை தொடர்புபடுத்தி | அமைச்சரவை தீர்மானம் மற்றும் திறைசேரி அறிவுத்தல்கள் என்பவற்றின் வேண்டுகையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

அனுப்புவதற்கு அதிகாரசபை அறிவுறுத்தியிருந்தது. எவ்வாறாயினும், அதிகாரசபையானது இந்த அறிக்கை திகதிவரையும் நிறுத்திவைத்த இலாபங்களை அனுப்பியிரக்கவில்லை.

சமர்ப்பப்பதுடன் மேலும் அமைச்சரவை CAASL அதன் செலவினங்களிற்காக உழைக்கின்ற OSS மாதம் ஒன்றிற்கு இ.ரூபா 90 மில்லியன் உழைக்க முடியுமென தீர்மானித்திருந்தது. சபை முதலாவது அமைச்சரவை தீர்மானம் 2024/02/19 ஆந் திகதிய 2 ஆவது அமைச்சரவை தீர்மானத்தால் மீளுரைக்கப்பட்டதென சட்ட குறிப்புகளிலிருந்து மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

CAASL ஆனது கௌர அமைச்சு செயலாளரின் அவதானிப்பு இல. (அ)(2) உடன் இணங்குவதற்கு படிமுறைகளை எடுத்திருந்ததுடன் உரிய பிரமாணங்களிற்கு திருத்தங்களிற்காக நிதி, பொருளாதார ஸதிரதன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைசு செயலாளரிற்கு சிவில் விமான போக்குவரத்து அமைச்சு செயலாளரின் ஊடாக ஏற்கனவே வேண்டுகை சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், 2024/02/19 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையின் ரூபா 90 மில்லியன் பிடிகாசின் பின்னர் OSS வருமானம் மாதாந்த அடிப்படையில் அனுப்புவதற்கு வருமானம் 2024 ஏப்ரல் 22 ஆந் திகதிய TO/REV/01/14/14-11 ஆம் இலக்க கடிதம் மூலம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் CAASL இற்கு அறிவுறுத்தியமையால் மொத்த OSS வரி அனுப்புதல் நிகழ்ந் திருக்கவில்லை என்பது உங்களுக்கு தயவுடன் தெரிவிக்கின்றோம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மேற்குறிப்பிட்ட சுட்டிக் காட்டலில் பங்குரிமையாளர்களிற்கு உள்ளபடியான நிதி நிலைமையை சமர்ப்பிப்பதற்கு அவற்றினை மீள சமர்ப்பிப்பதற்கு CAASL இயலக் கூடியவாறு இல. 1 இலுள்ள விடைகளின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டிற்காக முறையான ஏற்பாடுகளுடன் திருத்துவதற்கு நான் உங்களுடைய அனுமதியை வேண்டுகின்றேன். | |
| (உ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 02/2012 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பிரிவால் திருத்தப்பட்ட 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறக்கையின் 6.5.1 ஆம் பிரிவு அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்காக வழிகாட்டல் | மீளாய்வாண்டிற்காக நிதிக் கூற்றுக்கள் நிதியாண்டு முடிவமைந்து 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்கள் 116 நாட்கள் தாமதத்துடன் 2024 யூன் 24 இவேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பதில் பெறப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையானது சுற்றறிக்கை அறிவுறுத்தலுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (ஊ) | 2023 திசெம்பர் 05 ஆந் திகதிய CP/23/2271/604/221 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் | அதிகாரசபை 2022 ஆம் ஆண்டிற்காக தேறிய இலாபம் உழைத்திருந்த என அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் அதிகாரசபை குறிப்பிடப்பட்ட போதிலும் வெளிநாட்டு விற்பனை மிகையறவீடுகள் (OSS) எடுப்பதன் மூலம் மேற்குறித்த தேறய இலாபம் கணிப்பீடு செய்யப்பட்டு அதிகாரசபையின் வருமானமாக திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டது. இதன்படி 2022 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 9,060,561 ஆன மிகை யூதியம் செலுத்துவதற்கு இயலாதிருந்த அதிகாரசபை ரூபா 633,190,535 ஆன நட்டத்தை ஈட்டியிருந்தது. | 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளிற்கான இலாபம் இந்த தீர்மானத்துடன் மாற்ற மடையவில்லை. 2023 ஆம் ஆண்டிற்கான இலாபம் ரூபா 4,600,480,452 இல் பிரயோகிக்க கூடியதாக இருந்தது ரூபா 360,288,651 மாத்திரமேயாகும். | அதிகாரசபையானது அமைச்சரவைக்கு அறிக்கையிடப்பட்ட தகவலின் உண்மைத்தன்மை மற்றும் நியாய தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) 2023 திசெம்பர் 11 ஆந் திகதிய PED 04/2023 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கை பிரகாரம் வருகை, செயலற்றல் அல்லது ஊக்குவிப்பிலிருந்து ஏதாவது அடிப்படையில் ஏதாவது ஊக்குவிப்பு செலுத்தியிருக்காத நிறுவனங்களிற்காக மேற் குறிப்பிட்ட மிகை ஊதியங்கள் செலுத்த வேண்டி ஏற்பட்ட போதிலும் அதிகாரசபை மேற்குறிப்பிட்ட மிகையூதியங்களிற்கு மேலதிகமாக படிகளாக ரூபா 63,165,455 ஆக தொகையை செலுத்தியிருந்தது. | அமைச்சரவை விசேட அனுமதியுடன் சுற்றறிக்கையில் குறிப்பிடப்படாத தொகைகளுடன் படிகள் செலுத்தப்பட்டு அல்லது CAASL மிகையூதியத்தை செலுத்தியிருக்காதுவிடின் வருகை, செயலற்றல் அல்லது ஊக்கவிப்பு ஏதாவது அடிப்படையில் ஊக்குவிப்புக் மிகையூதிய தொகை மாற்றங்கள் மாத்திரமே செலுத்தப்படும் போது மிகையூதியம் செலுத்த முடியாதவை பற்றி PED/04/2023 ஆம் இலக்க PED சுற்றறிக்கை குறிப்பிடவில்லை. | அதிகாரசபையானது சுற்றறிக்கை அறிவுறுத்தலுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (ஏ) 2021 நவம்பர் 17 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
